
# ‘தமிழுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் வ.சுப. மாணிக்கம்’

திருச்சி, நவ 8: தமிழுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, மனிதநேயமிக்கவராக வாழ்ந்தவர் வ.சுப.மாணிக்கம் என்றார் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வெ.மா. முத்துக்குமார்.

சாகித்திய அகாதெமி, பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழியல் துறை ஆகியவை இணைந்து திருச்சியில் செவ்வாய்க்கிழமை நடத்திய வ.சுப.மாணிக்கம் நூற்றாண்டு உரையரங்கைத் தொடக்கிவைத்து மேலும் அவர் பேசியது: தமிழுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, மனிதநேயமிக்கவராக திகழ்ந்தவர் வ.சுப.மாணிக்கம். தனக்கு கிடைத்த பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியிலும் நேர்மை மிக்கவராக இருந்து கடைசி வரை சிறப்பாகப் பணியாற்றியவர். மொழிக்காகவும், சமுதாயத்துக்காகவும் வ.சுப.மாணிக்கம் வாழ்ந்ததுபோன்று, இன்றைய இளைஞர்களிடம், சமூகத்துக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணம் வர வேண்டும். அதன்படி இளைஞர்கள் செயல்பட வேண்டும் என்றார் முத்துக்குமார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி பேசியது:




திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் வ.சுப. மாணிக்கத்தின் நூற்றாண்டு உரையரங்கைத் தொடக்கிவைத்து பேசுகிறார் துணைவேந்தர் வெ.மா. முத்துக்குமார். உடன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர்.

மாணவர்களுக்குத் தன்னம்பிக்கைத் தருபவராக இருந்த வ.சுப. மாணிக்கம், தமிழைப் பயன்படுத்துவதற்குத் தயங்கக்கூடாது என்பதில் உறுதிபட இருந்தார். தமிழில் பல புதிய புதிய படைப்புச் சொற்களை உருவாக்கியவர்.

தமிழுக்காக போராடியவர் என்றாலும், பிறமொழிக் கற்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்காதவர் வ.சுப.மாணிக்கம். மொழிக்காக மக்கள் வாழ வேண்டும். தாய்த் தமிழுக்கு எமனாக வாழக் கூடாது எனக்கூறியவர். இப்படி பல்வேறு சிறப்புகளை உடைய வ.சுப.மாணிக்கத்துக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது மிகச் சிறப்புக்குரியது என்றார் சுந்தரமூர்த்தி.

சாகித்திய அகாதெமி பொறுப்பு அலுவலர் அ.சு.இளங்கோவன் பேசும்போது, எழுத்து, மொழி, இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த அறிஞர்களை மதித்து அவர்களுக்குச் சிறப்பு செய்யும் பணியை சாகித்திய அகாதெமி செய்து வருகிறது என்றார் அவர்.

உரையரங்குக்கு சாகித்திய அகாதெமி தமிழ் ஆலோசனைக்குழு ஒருங்கிணைப்பாளர் கி.நாச்சிமுத்து தலைமைவகித்தார். அகாதெமி பொதுக்குழு உறுப்பினர் இரா.காமராசு, வ.சுப.மாணிக்கத்தின் மகன் பாரி, மகள் மாதரி, பல்கலைக்கழக நிகழ்கலைத்துறைத் தலைவர் பா.மதிவாணன், தமிழியல் துறைத் தலைவர் உ.அலிபாவா உள்ளிட்டோர் பேசினர். மாலையில் நடைபெற்ற நிறைவு விழாவில், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ம.திருமலை நிறைவுரை யாற்றினார்.

உரையரங்கில் தமிழ்த்துறை பேராசிரிய, பேராசிரியைகள், தமிழ் ஆர்வலர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.